DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 259/2010 |
| Deposition of Witness for | Prosecution PW 9 |
| Name | ராமச்சந்திரன் |
| Father / Husband Name | கோபால் |
| Village | |
| Taluk | ஆண்டிச்சூரணி |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th March 2024.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் ஆண்டிச்சூரணியில் வசித்து விவசாய வேலை செய்து வருகின்றேன். விபத்தில் இறந்து போன மாரியம்மாளைத் தெரியும். சம்பவம் நடந்தபோது பார்த்தேன். கடந்த 04.07.2010 ம் தேதி மாலை 05.00 மணியளவில் சூசையப்பர் பட்டினம் விலக்கு சாலையில் காளையார்கோவிலிருந்து தொண்டி நோக்கி டிப்பர் ஒன்று அதிவேகமாக வந்தது. அனாதை ஆசிரமம் பக்கத்திலிருந்து இறந்து போன மாரியம்மாள் வந்து கொண்டிருந்தார்கள். டிப்பர் லாரி அவர்கள் மீது மோதி அருகில் கவிழ்ந்துவிட்டது. நான் எதிர்புறமாக வந்து கொண்டிருந்ததால் வண்டியை நிறுத்திவிட்டு ஓடிப்பார்த்தேன். அவர் உடல் நசுங்கி இறந்துவிட்டார். அந்த டிப்பர் லாரி ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார். அவரைப் பார்த்தால் அடையாளம்

காட்டுவேன். தற்போது அவர் நீதிமன்றத்தில் இல்லை. அதன்பிறகு காவல் துறை வந்துவிட்டது. விவரத்தை நான் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை நான் கையில் குறித்து வைத்து அதைப் பார்த்து தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தேதியை நான் கையில் எழுதிவைத்துள்ளேனா என்றால் ஆமாம் ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக எழுதினேன். சூசையப்பர் விலக்கு என்பது இரண்டு இடத்தில் உள்ளது என்றால் ஆமாம். சூசையப்பர் விலக்கிலிருந்து அனாதை ஆசிரமம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

2) அந்த அனாதை ஆசிரமம் அமைந்துள்ள பகுதி டா னா வடிவத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் வந்து கொண்டிருந்த இடத்திற்கும் டிப்பர் லாரி இருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 50 அடி தூரம். நான் அந்த இடத்திற்கு வரும்போது டிப்பர் லாரி ஓட்டுநர் அங்கு இல்லை என்றால் ஆமாம் ஓடிச் சென்ற ஓட்டுநரை அங்கிருந்த 4 நபர்கள் பிடித்துவிட்டார்கள். விபத்தில் இறந்த நபர் எனக்கு என்ன உறவு என்றால் யாரென்றே தெரியாது. அந்த ரோட்டில் வடக்கிலிருந்து வரும் நபர்கள் ரோட்டைக் கடந்து வலது பக்கமாக நடந்து செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

3) விபத்து நடந்து எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் சுமார் 10 நிமிடத்தில் வந்துவிட்டார்கள். டிப்பர் லாரியில் டிராவல் மண் ஏற்றப்பட்டு இருந்தது. அனாதை ஆசிரமத்திற்கும் ஆண்டிச்சூரணி விலக்கிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 1/2 கி.மீ. இருக்கும். விபத்தில் இறந்த நபர் ரோட்டைக் கடக்க முயற்சிக்கும் போது ஓட்டுநர் திடீரென பிரேக் பிடித்ததால் தான் வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்பவத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல நான் நேரடியாகப் பார்த்தேன். விபத்தானது இறந்த நபரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 12.03.2024**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 259/2010 |
| Deposition of Witness for | Prosecution PW 10 |
| Name | வெள்ளைச்சாமி |
| Father / Husband Name | கொங்கப்பன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th March 2024.

-----------------------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2013 ம் ஆண்டு ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2010 ம் ஆண்டு காளையார் கோவில் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது கடந்த 05.07.2010 ம் தேதி காளையார் கோவில் நிலைய குற்ற எண். 139/2010 பிரிவுகள் 304(A) இதச வழக்கில் வாகன விபத்து ஏற்பட்டு இறந்து போன மாரியம்மாள் க/பெ முத்து முப்பையூர் என்பவரின் பிரேதத்தை சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பிரேதத்தின் அங்க மச்ச அடையாளங்களை பிரேத மருத்துவரிடம் அடையாளம் காண்பித்தேன். பிரேத

மருத்துவ பரிசோதனை முடித்து பிரேதத்தை மாரியம்மாளின் உறவினர்களிடம் குல வழக்கப்படி நல்லடக்கம் செய்ய பிரேதத்தை ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

இல்லை.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 12.03.2024**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.